**சுருக்கம்**

2011-12 ஆம் கல்வியாண்டில் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டத்தில் புதிய பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டதற்கு பதிலாக விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வி (ஜி. 1) துறை**

**அரசாணை (நிலை) எண். 160** **நாள்: 13.7.2011**

**ஆனி 28**
**திருவள்ளுவர் ஆண்டு 2042,**

**படிக்க:**

1) அரசாணை நிலை எண்.35, உயர்கல்வி (ஜி.1)த் துறை, நாள் 8.2.2011.
2) விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.பி4/8661/2011, நாள் 29.6.2011.

----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழகத்தில் எட்டு இடங்களில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி வெளியிடப்பட்ட ஆணையில் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டத்தில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் ஒன்றாகும்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் அவர்கள் திருச்சுழி வட்டம், திருச்சுழியில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிதாக தொடங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டதை அடுத்து, திருச்சுழியில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கு 10 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்யும்படியும், 2011-12ம் கல்வி ஆண்டிலேயே கல்லூரி செயல்பட வேண்டும் எனவும், வகுப்புகள் நடத்துவதற்கு தகுதிவாய்ந்த கட்டிடத்தை தேர்வு செய்யும்படியும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பதிவாளர் கோரியிருந்தார் எனவும் திருச்சுழி வட்டம், திருச்சுழியில் போதுமான சாலை வசதி, இரயில் வசதி,

கல்லூரி மாணவ மாணவியரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வசதிகள் மற்றும் பிற்காலத்தில் கல்லூரி விரிவாக்கத்திற்கு ஏதுவான முறையில் இடம் தேர்வு செய்ய பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும் ஆனால் அனைத்து வசதிகளுடன் கூடிய தகுதியான நிலம் திருச்சுழி வட்டத்தில் தேர்வு செய்ய இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் 2011–12ம் கல்வியாண்டிலேயே பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்குவதற்கு உரிய கட்டிட வசதியும் திருச்சுழியில் அமையப் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் விருதுநகர் மாவட்டத்தில் 12 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைந்துள்ளன என்றும், இவற்றில் சாத்தூர் வட்டத்தில் ஒரு தனியார் கலைக்கல்லூரி மட்டுமே உள்ளது என்றும், சாத்தூர் நகரமானது மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை எண்.7ல் அமைந்திருப்பதாலும், இரயில் போக்குவரத்து மற்றும் சாலை வசதியுடன் மாவட்டத்தின் பிற பகுதியிலிருந்து எளிதாக வந்து செல்வதற்கு ஏற்ப மாவட்டத்தின் மையப்பகுதியில் அமைந்திருப்பதாலும், இதனைச் சுற்றியுள்ள அனைத்து வட்டங்களிலிருந்தும், பள்ளிகளிலிருந்தும் மாணவ, மாணவிகள் பயில வாய்ப்பு உள்ளதாலும், அரசு கலைக்கல்லூரி ஏதும் இல்லாத காரணத்தினாலும் கல்லூரியை பிற்காலத்தில் நல்ல முறையில் விரிவாக்கம் செய்திட வாய்ப்பு இருப்பதாலும், விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 2011-12ம் கல்வியாண்டில் சாத்தூரில் தொடங்க அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார். மேலும் சாத்தூர் வட்டத்திலேயே நிரந்தரமாக பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைப்பதற்கு தேவையான நிலத்தினை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் 2011-12ம் கல்வியாண்டிலேயே பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தற்காலிகமாக திறப்பதற்கு சாத்தூர் வட்டம், மேட்டமலை கிராமத்தில் உள்ள பி.எஸ்.என்.எல். கல்வியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீவத்ஸா பாலிடெக்னிக் கல்லூரிகளை பார்வையிட்டதில் பி.எஸ்.என்.எல். கல்வியியல் கல்லூரியில் போதுமான அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் இருப்பதாலும், உடனடியாக கல்லூரியை நடத்துவதற்கு வசதியாகவும், போக்குவரத்து வசதியுடனும், சாத்தூர்-சிவகாசி சாலையில் அமைந்திருப்பதாலும் அவ்விடத்தில் தற்காலிகமாக கல்லூரியை தொடங்கலாம் எனவும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் கருத்துருவிற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழக கூட்டுநர் குழு (Convenor Committee) பதிவாளரின் ஒப்புதல் பேரில் ஒப்புதலளித்துள்ளது.

5. விருதுநகர் மாவட்ட ஆட்சியாளரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.35, உயர்கல்வி (ஜி.1) துறை, நாள் 8.2.2011ல், 2011–2012ஆம் கல்வியாண்டில் விருதுநகர் மாவட்டம், திருச்சுழியில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதிக்கப்பட்ட ஆணைக்குப் பகுதித் திருத்தம் செய்து விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் தொடங்க அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. மேலும் சாத்தூரில் நிரந்தரமாக பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைப்பதற்கு தேவையான நிலத்தினை தேர்வு செய்யப்படும் வரையில் சாத்தூர் வட்டம்,

மேட்டமலை கிராமத்தில் உள்ள பி.எஸ்.என்.எல். கல்வியியல் கல்லூரியில் மேற்படி பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை தற்காலிகமாக இயங்க அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 34538/Edn.I/11 நாள் 8.7.2011ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர்.
பதிவாளர்,மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை 18/35.

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை.
நிதி (கல்வி .I / வ.செ.பொ–I / வ.செ.பொ.II) துறை,
சென்னை-9`
உயர்கல்வி (ஏ, டி, எப், எச், கே) துறை, சென்னை -9.
இ.கோ. / உதிரிகள்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்